பின்வரும் காரணங்களுக்காக சில வேளை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல விரும்புவதில்லை:




**பாடசாலையில் ஆசிரியர்கள் பின்வருவனவற்றைச் செய்வார்கள்:**

- ஒவ்வொரு நாளும் வருகைப் பதிவு
- நீங்கள் பாடசாலைக்கு சமூகமளித்திருக்காவிட்டால் கடிதங்கள் கேட்பார்கள்
- நீங்கள் பாடசாலைக்கு நீண்ட காலம் சமூகமளித்திருக்காவிட்டால் உங்கள் நலத்தை விசாரிப்பார்கள்
- நீங்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காவிட்டால் உங்கள் பெற்றோர்/கவனிப்பாளர் க்கு அறிவிப்பார்கள்

# பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பது நல்லதல்ல

மேலதிகத் தகவல்களுக்கு பாடசாலைகள் அவற்றின் **DE&T** பிராந்தியக் கந்தோரை தொடர்பு கொள்ளலாம்.



www.sofweb.vic.edu.au/wellbeing/welfare/attend.htm

State Government Victoria
Department of Education & Training

# பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பது நல்லதல்ல

## உயர்நிலைப் பள்ளி மாணவருக்குரிய வருகைத் தகவல்கள்

நீங்கள் ஏன் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்



Tamil

Knowledge&Skills
Building a Future

Victoria
The Place To Be

## மாணவர்களின் பொறுப்பு

- ✓ பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தரல்
- ✓ வகுப்புகள், பாடசாலை கூட்டங்கள் மற்றும் பாடசாலைக்குப் வெளியே நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு நேரத்திற்கு வருகை தரல்
- ✓ நீங்கள் பாடசாலைக்கு வருகைதர இயலாது என்று அறிந்தவுடன் பாடசாலைக்கு அறிவிக்கவும்
- ✓ நீங்கள் பாடசாலைக்கு திரும்பி வந்த உடன் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்கள், சந்திப்பு வேளைத் துண்டுகள் மற்றும் பாடசாலைக்கு சமூகமளிக்க இயலாமைக்குரிய சான்றுகளைக் கொண்டுவரவும்
- ✓ பாடசாலைக்கு தாமதித்து வந்தால் கந்தோரில் ஒப்பமிடவும்
- ✓ பாடசாலை முடிவுறுமுன் வெளியேறினால் கந்தோரில் ஒப்பமிடவும்




- → குறிப்பிட்ட தொகுதிக்குரிய ஆசிரியர், எம் ஐ பி இன் ஆசிரியர், குறிப்பிட்ட வருடத்திற்குரிய ஒருங்கிணைப்பாளர், அல்லது மாணவர் நலம்புரி ஒருங்கிணைப்பாளர்
- → உங்களை ஒரு வழிகாட்டுதல் அதிகாரி அல்லது சமூக வேலை செய்யும் அதிகாரிக்குச் சிபாரிசு செய்யப்படலாம்
- → வருகைப் பிரச்சனை ஒரு காரணமாயிருந்தால் நீங்கள் சௌகரியமாயிருக்கூடிய ஒருவருடன் கதையுங்கள்

## உங்கள் கருமங்களைச் சரிபார்க்க உதவும் பயனுள்ள 10 குறிப்புகள்

### ✓ பாடசாலைக்கு வருகை செய்வதைக் கடுமையாக அனுசரியுங்கள்

நீங்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தந்து வகுப்புகளுக்கு நேரத்திற்கு சமூகமளிப்பதன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றவும், பாடசாலையில் மகிழ்சியாகவும் இருக்கவும் முடியும்

### ✓ ஒழுங்காக வருகை தரவும்

நீங்கள் எப்போதாவது பாடசாலைக்குச் சென்று குழப்பமடைந்தும் அமைதியற்றும், என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ள இயலாமலும், உணர்ந்தீர்களா? இது முந்தைய நாளில் சில முக்கியமான பாடங்களைத் தவறவிட்டதால் திட்டத்தின் நோக்கத்தை நீங்கள் இழந்தீர்கள் என்று அர்த்தமாகும். இந்த நிலைமை தொடர்ந்து நடைபெற்றால் இதை நிறுத்துவது மிகவும் கடினம்.

### ✓ நீங்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காவிட்டால் பாடசாலையுடனும், ஆசிரியர்களுடனும் தொடர்பை வைத்துக் கொள்ளுங்கள்

நீங்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காத வேளைகளில் அதை பாடசாலைக்கும், ஆசிரியர்களுக்கும் அறிவியுங்கள். ஆசிரியர்கள் அதை அறியும்போது அவர்கள் உங்களுடன் வேலை செய்து ஒரு வேலைத்திட்டத்தை ஒழுங்கு செய்வார்கள். அப்போது நீங்கள் பாடசாலைக்கு திரும்பும்போது அவர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள்.



### ✓ தவறவிட்டதை வகுப்பு ஆசிரியர்களுடன் சேர்ந்து நிவர்த்தி செய்யுங்கள்

நீங்கள் சில வகுப்புகளை தவற விட்டால் உங்கள் ஆசிரியர்களைச் சந்தித்து எப்படி அவற்றை நிவர்த்தி செய்ய முடியும் என்று கண்டு பிடியுங்கள். அவர்கள் உங்களை மிகவும் புரிந்து கொண்டு தவற விட்டதை நிவர்த்தி செய்வதை இலகுவாக்க சில சுருக்கமான வழிகளைச் சொல்லுவார்கள். ஆசிரியர்கள் அநேகமாக சுறுசுறுப்பாக இருப்பார்கள் உடனுக்குடன் உதவி செய்ய அவர்களுக்கு முடியாமல் இருக்கும். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.

### ✓ பின்வரும் பாடசாலைக்கு வெளியே நடைபெறும் நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளுங்கள்: VET, VCAL, வேலைக்கு அமர்த்தப்படல், தொழில் அனுபவம், தொழிற் பயிற்சி, தொழிலின் ஊடாக பயிற்சி பெறல்

பாடசாலைக்கு வெளியே நடைபெறும் பாடசாலைத் திட்டங்கள் புதியது மற்றும் வித்தியாசமானது என்று கலவரம் அடையாதீர்கள். இவை உங்களது ஒழுங்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும். அத்தோடு இவற்றுக்கும் பாடசாலை வகுப்புகளுக்குரிய வருகைத் தேவைகள் தேவைப்படும்.

### ✓ சுறுசுறுப்பாயிருங்கள்

மதிப்பீடு செய்யும் நாட்கள், சுற்றுலா நடைபெறும் நாட்கள் போன்ற முக்கியமான நாட்களை குறிப்பேட்டில் குறித்துக் கொள்வதை பழகுங்கள். கடைக்குச் செல்லும் நாட்கள், வைத்தியர் மற்றும் பல் வைத்தியரைச் சந்திக்கும் வேளைகளை ஒரு பாடசாலை நாளில் வைத்துக் கொள்ள வேண்டாம்.

### ✓ சமூகத் திறன்கள் மற்றும் நண்பர்கள் வட்டம் ஆகியவற்றை விருத்திசெய்யுங்கள்/பழகுங்கள்

தோழமையை விருத்தி செய்ய பாடசாலை ஒரு சிறந்த இடம். இந்த செயல்முறையின் ஒரு பகுதியாக நீங்கள் பிரதானமான சமூக மற்றும் தொகுதி வேலைத் திறன்களை விருத்தி செய்வீர்கள்.

### ✓ வேலைக்கு ஆயத்தமுடையவராய் உங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்

உங்களை வேலைக்கு ஆயத்தமுடையவராய் ஏற்படுத்த பாடசாலை உதவும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பாடசாலைக்கு வருகைதரும் பழக்கம் உங்களை வேலைக்கு வருகைதரும் பழக்கத்திற்கு தயார் படுத்தும்.

### ✓ மேலதிக கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை அணுகுதல்

பாடசாலை உங்களை மேலதிக கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கு ஆயத்தப்புடுத்தும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பாடசாலை வேலைப் பழக்கங்கள் உங்களை மேலதிக கல்வி மற்றும் பயிற்சிகளுக்கு ஆயத்தப்படுத்தும்.

### ✓ விசேட ஏற்பாடு

நீங்கள் பாடசாலைக்கு வருகை தராததற்கு உரிய காரணங்களை விளக்கினால் இந்த நன்மையற்ற தன்மையை அனுமதிப்பதை உத்தேசிக்க இலகுவாயிருக்கும்.

